அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். அப்படி நாடு முழுவதிலும் ஒரே மாதிரியான விலை நிர்ணயித்தாலும் கூட, பீகார், மேற்கு வங்காளம் போன்ற இடங்களில் இருக்கும் படியான கரியை இங்கே கொண்டு வந்து சேர்ப்பதற்கு அதுவும் கன்னியாகுமரியின் கடைசி வரையில் கொண்டு வந்து சேர்ப்பதற்கு நிச்சயமாக பெரும் அளவுக்கு அதனுடைய செலவு இருக்கும். ஆகவே தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் இந்த டிஸ்டன்ஸ் கருதி—நம்முடைய தவறில்லை, நாடு பெரியதாக இருப்பதால் வரக்கூடிய நிலை அது—கன்சஷன் ரேட்டில் நமக்கு நிலக்கரியைத் தரும்படி எந்தவிதத்திலாவது மத்திய அரசை மேலும் வற்புறுத்து வதற்கு மாநில அரசு முயற்சியெடுக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இதுபற்றி குறிப்பிட்டு தமிழ்நாடு நிலக்கரி உற்பத்தி செய்யப்படும் சுரங்கத்தி லிருந்து அதிக தூரத்தில் இருக்கிறது என்பதால் 'பிரைட் சார்ஜிற்கு' கன்சஷன் கொடுக்க வேண்டுமென்று மாநில அரசு வலியுறுத்தி இருக்கிறது. மேலும் இதுபற்றி வலியுறுத்தும்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * * * உறுப்பினர் எழுப்பிய பிரச்சினையை அவைக்குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

மேட்டூர் அனல் மின் நிலையம்.

141—(*வினா எண். 8701)—**திரு. செ. செம்மலை :** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் அனல் மின் நிலையம் உற்பத்தியை எப்போது தொடங்கும்?

(ஆ) அதன் உற்பத்தி அளவு எவ்வளவு?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மேட்டூர் அனல் மின் நிலையத்தின் நான்கு பிரிவுகளின் இயக்கம் முறையே டிசம்பர் 1986, சூன் 1987, டிசம்பர் 1988 டிசம்பர் 1989 ஆகிய காலங்களில் இயக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

1986 நவம்பர் 21]

(ஆ) 210 மெ. வா. உற்பத்தித் திறன் கொண்ட ஒவ்வொரு பிரிவும், ஆண்டுக்கு 1,100 மில்லியன் யூனிட் வீதம் மொத்தம் 4,400 மில்லியன் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யும்.

திரு. செ. செம்மலை : துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் முடிவுறும்போது இந்தத் திட்டத்தினுடைய திட்ட மதிப்பீடு எவ்வளவாக இருக்குமென்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : துணைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி கேட்டால் பதில் சொல்ல இயலும்.

திரு. செ. செம்மலை : துணைத் தலைவர் அவர்களே, மேட்டூர் அனல் மின் நிலையத்திற்கு சென்னூரிலிருந்துதான் நிலக்கரி வர வேண்டும். ஆனால் அந்தச் சுரங்கம் இன்னும் தன்னுடைய உற்பத்தியைத் தொடங்காத நிலையில் சிங்க ரேணியிலிருந்து எண்ணூர் மின் நிலையத்திற்கு வருகிற நிலக்கரி இப்போது மேட்டூருக்குத் திருப்பியனுப்பப்படுகிறது. எனவே, சென்னூரிலிருந்து எப்போது நிலக்கரி வரவிருக்கிறது என்ற விவரத்தையும், அப்படி வருகிற போது, அமைச்சர் அவர்கள் சொன்ன அந்த முழு திறனையும் இந்த அனல் மின் நிலையம் எந்த ஆண்டில் அடையும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே சென்னூர் என்ற சுரங்கத்திலிருந்து நிலக்கரி இந்த வருடம் டிசம்பர் மாதம் துவக்கவிருக்கிற மேட்டூர் அனல் மின் நிலையம் முதல் யூனிட்டுக்கு வழங்கப்படும் என்று மத்திய அரசில் அறிவித்தார்கள். ஆனால் இதுவரையில் அந்த சென்னூர் சுரங்கமே அபிவிருத்தி செய்யப்படவில்லை. தமிழ் நாட்டில் உள்ள அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான மொத்த நிலக்கரி அல்லது வேறு மாநிலங்களுக்குத் தேவையான நிலக்கரி ஆகியவற்றையும், இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுகிற நிலக்கரியின் அளவையும் பார்த்தால் மிகப் பெரிய அளவிற்கு இடைவெளி இருக்கிறது. 'கோல் இந்தியா' இது சம்பந்தமாக ஒரு நல்ல திறனுடைய திட்டம் தீட்டினால் ஒழிய அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியை இந்தியாவில் 'கோல் இந்தியா' வழங்க முடியாது. ஒரே ஒரு வாய்ப்பு, இந்திய சர்க்கார் இந்தியாவின் தென் பகுதியில் இருக்கும் தமிழ் நாட்டிற்கு ஆஸ்திரேலியா போன்ற இடங்களிலிருந்து வரக்கூடிய உயர்தர ஸ்டீமிங் கோலை தருவிப்பதற்கு அனுமதி வழங்குவதுதான்.